TNPSC Tamil Current Affairs 15th April 2017

1). "Unite Ideas #UNGAViz Textual Analysis and Visualisation challenge" ல் முதல் பரிசு பெற்ற இந்திய மென்பொருள் பொறியாளர் யார்?

A). Salem Avan.

B).Sandeep Konam.

C).Abdulqadir Rashik.

D).Nikhil Chandavarkar.

விடை : C).Abdulqadir Rashik.

Unite Ideas #UNGAViz Textual Analysis and Visualisation challenge" ல் முதல் பரிசு பெற்றவர் இந்திய மென்பொருள் பொறியாளர் Abdulqadir Rashik ஆகும். உலகளாவிய கொள்கை. தேடி ஒருவருக்கொருவர் பார்த்து ஐ.நா உறுப்பினர் நாடுகளின் தீர்மானங்கள் மற்றும் வாக்களிப்பு முறைகளைப் பற்றிய ஐ.நா பொதுச் சபை தீர்மானங்களைத் தேடித் தெரிந்து கொள்ள ஒரு திறந்தவெளி கருவியை அறிமுகப்படுத்தினார். Abdulqadir Rashik அவர்களுடைய முன்மாதிரி (Prototype) பொதுமயமாக்கப்பட்டு ஐ.நா மற்றும் ஐ.நா உறுப்பினர் நாடுகளுடன் இணைக்கப்படும். இவ்விணைப்பு ஐ.நா உறுப்பினர் நாடுகளால் அங்கீகரிக்கப்படும். இவர் தனது "Links to Suitable Cities" எனும் நிலையான முன்னேற்றத்திற்கான இலக்குகளின் தொடர்புகளை வரைபடுத்தி காட்சிப்படுத்துதலுக்காக மார்ச்சு 2017 ல் நடந்த ஐ.நா "#LinksSDGs challenge" ல் இவர் முதல் பரிசு பெற்றார். Abdulqadir Rashik ஒரு தொழிலதிபர் மற்றும் Miavy Systems ன் நிறுவனர்.

2). எந்த மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் "Power for All" திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது?

A). மத்திய பிரதேசம்.

B).தமிழ்நாடு.

C).ஹரியானா.

D).உத்திர பிரதேசம்.

விடை : D). உத்திர பிரதேசம்.

உத்திர பிரதேச அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் "Power for All" திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது. அக்டோபர் 2018 முதல் மாநிலம் முழுவதும் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கும் சேவை மற்றும் 2019 ஆண்டு முதல் அம்மாநிலத்தில் உள்ள அனைத்து வீடு மற்றும் விவசாய நிலங்களுக்கு மின்சார வசதி கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மொத்த செலவு 40 ஆயிரம் கோடி ரூபாயகும். இதில் 20 ஆயிரம் கோடி ரூபாயை 2018 ல் செயால்படுத்தப்படும் திட்டத்திற்காக செலவிடப்படவுள்ளது.

3). "2017 Cartier Women's Initiative" விருதினை இந்தியாவைச் சேர்ந்த எந்த சுற்றுச்சூழல் பொறியாளர் பெற்றுள்ளார்?

A).Trupti Jain.

B).Kirti Bose.

C).Nitin Bansal.

D).Chandresh Yadav.

விடை : A). Trupti Jain.

இவ்விருதினை அவர், திடீர் வெள்ளப் பெருக்கு, பஞ்சம் போன்றவற்றிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றுதல், நிலங்களில் பெண்களுக்கு வேலை மற்றும் தண்ணீரைப் பராமரிப்பதற்கான தீர்வுகள் போன்றவற்றில் பங்காற்றியதர்காக சிங்கப்பூரில் உள்ள Victoria Theatre and Concrete hall ல் நடந்த விழாவில் "2017 Cartier Women's Initiative" விருதினை இந்தியாவைச் சேர்ந்த Trupti Jain எனும் சுற்றுச்சூழல் பொறியாளர் பெற்றுள்ளார். இவர் ஆசியா- பசிபிக் விருதிற்காக 120 நாடுகளிலிருந்து விண்ணப்பித்த 1,900 விண்ணப்பதாரர்களில் தேர்வு செய்யப்பட்ட 6 நபர்களுல் ஒருவர். இவ்விருதினைப் பெருபவர்களுக்கு தலா 100,000 டாலர் பரிசுத் தொகையாகக் கொடுக்கப்படும். இவர் மழை நீரை வடிகட்டி நிலத்தடியில், வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு போன்ற நேரங்களில் சேமித்து வைப்பட்றகான தண்ணீர்ப் பராமரிப்புத் தீர்வுகளைக் கொடுக்கும் குஜராத்தில் உள்ள நைரீட்டா கம்பனியின் நிறுவனர்.

4). சமீபத்தில் மறைந்த "Girish Saxena" எந்த மாநிலத்தின் ஆளுநர்?

A).Jammu & Kashmir.

B).Himachal Pradesh.

C).Sikkim.

D).Manipur.

விடை : A). Jammu & Kashmir.

சமீபத்தில் டில்லியில் மறைந்த 90 வயதான "Girish Saxena" ஜம்மு காஷ்மிர் மாநிலத்தின் ஆளுநர். இவர் 1950 ஆம் ஆண்டின் ஐ.பி.எஸ். அதிகாரி ஆவார். இவர் தலைமை காவலராக உத்தர பிரதேச மாநிலத்தின் ராம்பூர், அலிகார்க், பரெய்லி மற்றும் அலகாபாத் போன்ற மாவட்டங்களில் பணியாற்றியுள்ளார். பின்னர் ஏப்ரல் 1969 ல் இவர் இந்திய அரசாங்கத்தின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு(Research and Analysis) பிரிவில் 16 வருடம் பணியமர்த்தப்பட்டு பின்னர் 1983 முதல் 1986 வரை அப்பிரிவிற்குத் தலைமை தாங்கினார். ஆத்துறையில் பணி ஓய்வுக்குப் பின்னர் ஜனவரி 1988 வரை பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களுக்கு அலோசகராக விளங்கினார். சர்வதேச நிகழ்வுகள், தேசிய பாதுகாப்பு போன்றவற்றில் சிறந்து விளங்கினார்.

5). "2017 Asian Billiards Championship title" ஐ வென்றவர் யார்?

A).Mivhael Ferreira.

B).Sourav Kothari.

C).Pankaj Advani.

D).Subhas Agarval.

விடை : C). Pankaj Advani.

16 முறை உலக சாம்பியன் பட்டம் பெற்ற Pankaj Advani தனது போட்டியாளரான Sourav Kothari யை 6-3 என்ற கணக்கில் வீழ்த்தி "2017 Asian Billiards Championship" பட்டத்தை வென்றார்.

6). இந்தியாவின் முதல் தனியார் துறை ரயில் நிலையம் எந்த மாநிலத்தில் உள்ளது?

A). Tripura.

B).Odisha.

C).Kerala.

D).Madhya Pradesh.

விடை : D). Madhya Pradesh.

மத்திய ரயில் போக்குவரத்துத்துறை அமைச்சர் Suresh Prabhu இந்தியாவின் முதல் தனியார் துறை ரயில் நிலையமான "Habibganj station" ஐ மத்திய பிரதேசத்தில் உள்ள போபாலில் தொடங்கிவைத்தார். இந்த ரயில் நிலையத்தின் கட்டிடம் விமான நிலையத்தின் கோட்டில் இருக்கும். ஆனால் ரயில் போக்குவரத்தினை ரயில் போக்குவரத்துத்துறையே கண்காணித்துக் கொள்ளும்.

7). இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்தில் சமீபத்தில் "பான சங்கராந்தி" திருவிழா நடைபெற்றது?

A). Odisha.

B).Tamil Nadu.

C).Kerala.

D).Assam.

விடை : A). Odisha.

பன சங்கராந்தி என்று அழைக்கப்படும் மகா பிசுப சங்கராந்தி ஒடிசா மாநிலத்தில் உள்ள புத்த மற்றும் இந்து மதத்தினரால் ஏப்ரல் 14,2017 அன்று புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டது. மாம்பழம்-பால்-தயிர் போன்றவற்றால் செய்யப்பட்ட பாரம்பரியமிக்க குளிர்பானத்தின் காரணமாக இத்திருவிழா இப்பெயர் பெற்றது. இத்திருவிழா ஹனுமன் பிறந்த தினமாகக் கொண்டாடப்படுவதினால் மக்கள் அனைவரும் சிவன் சக்தி அல்லது ஹனுமன் கோவிலுக்குச் சென்று வழிபடுவர். இத்திருவிழாவின் பொழுது மக்கள் ஆறு மற்றும் கோவில்களில் குழியல் செய்வர் மற்றும் மேலம், வீதி நாடகம் போன்றவற்றில் பங்கு பெறுவார். இவ்விழாவின் முடிவில் மக்கள் தீ மிதிப்பர். வைசக்தி (வட மற்றும் நடு இந்தியா), பிஹூ(அஸ்ஸாம்), விசு(கேரளா), புத்தாண்டு(தமிழ்நாடு), போன்ற இடங்களில் கொண்டாடுவதைப் போலவே ஒடிசா மநிலத்திலும் கொண்டாடப்படுகிறது.

8). கோரடி அனல் மின்நிலையம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A).Hariyana.

B).Andhra Pradesh.

C).Tamil Ndau.

D).Maharashtra.

விடை : D). Maharashtra.

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ள நாக்பூர் அருகில் உள்ள கோரடியில் கோரடி அனல் மின்நிலையம் அமைந்துள்ளது. இதனை பிரதமர் நரேந்ர மோடி 3,300 மெகா வாட் மின் உற்பத்திக்காக அற்பணித்தார். இந்த அனல் மின்நிலையத்தின் மூலம் விவசாயிகள் தன் தேவைக் கேற்ப மின்வசதி பெற்று பயண் பெறுவார்.

9). எந்த இரு நாடுகளுக்கிடையே "Sagarmatha Friendship 2017" எனும் முதல் முறையே ராணுவ கூட்டுப் பயிற்சி நடை பெற்றது?

A).Nepal and Myanmar.

B).China and Nepal.

C).Myanmar and China.

D).Bhutan and Myanmar.

விடை : B). China and Nepal.

தீவிரவாத ஒழிப்பு மற்றும் பேரிடர் மேலான்மை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சீனா மற்றும் நேபால் நாட்டிற்கிடையே "Sagarmatha Friendship 2017" எனும் ராணுவ கூட்டுப் பயிற்சி ஏப்ரல் 17,2017 ல் தொடங்கி 10 நாட்கள் நடைபெற்றன. உலகையே அச்சுருத்திக் கொண்டிருக்கும் தீவிரவாதத்திலிருந்து ஆயத்தமாயிருத்தலைக் கூறும் வகையில் ராணுவ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. Sagarmatha என்பது சீனா மற்றும் நேபால் நாட்டிற்கிடையே இருக்கும் எவரெஸ்ட் சிகரத்தைக் குறிக்கும் சொல்.

10). நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட இடங்களில் இருக்கும் குழந்தைகளைத் தெளிவுபடுத்துவதற்க்காக எந்த மாநில காவல்துறை "தாரே ஜமீன் பர்" திட்டத்தைத் தொடங்கியுள்ளது?

A).Odisha.

B).Manipur.

C).Uttarakhand.

D).Jharkhand.

விடை : D). Jharkhand.

நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட ஜார்க்கண்டடில் உள்ள “Palamau” இடங்களில் இருக்கும் குழந்தைகளைத் தெளிவுபடுத்துவதற்க்காக ஜார்க்கண்ட் மாநிலக் காவல்துறை “தாரே ஜமீன் பர்” திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நம்பிக்கை இழந்த குழந்தைகளிடத்தில் இழந்த நம்பிக்கையைப் பெற்றுத் தருதல் மற்றும் மகிழ்ச்சியான வாழ்வை ஏற்படுத்தித் தருதல். இத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட உழந்தைகளுக்கு பைகள், காலணிகள், புத்தகம், துணி போன்ற அடிப்படையான பொருட்களை காவல்துறையினர் பெற்றுத் தருவார்கள்.

---